සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
කාන්තා, ළමා කටයුතු සහ සමාජ ආරක්ෂණ අමාත්‍යාංශය - සමාජ ආරක්ෂණ අංශය
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - சமூக பாதுகாப்பு பிரிவு
Ministry of Women, Child Affairs and Social Security – Social Security Division

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/09/COB/சுற்றறிக்கை

ඔබේ අංකය / உமது இல / Your No: ..........

දිනය / திகதி / Date: 2020.03.16

சமுர்த்தி சுற்றறிக்கை – **சமுதாய அடிப்படை/11/2020/02**

மாவட்ட செயலாளர்கள் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்,
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள் / பிரதி / உதவிப் பணிப்பாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,
சமுர்த்தி முகாமையாளர்கள்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
சமுர்த்தி சமுதாய அடிப்படை மற்றும் பிரதேச அமைப்புகளின் தலைவர்கள்,
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்கத் தலைவர்கள்.

## சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினால் சமுர்த்தி பயனாளிகளின் பொருட்டு செயற்படுத்தப்படுகின்ற சமுர்த்தி அருணலு சலுகைக்கடன் வேலைத்திட்டம்

### 01. அறிமுகம்

1.1 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 4(அ), (உ) மற்றும் 10 (அ), (ஊ) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு மேற்சொன்ன சட்டத்தின் 5(ஐ) மற்றும் 11(ஈ) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய செயற்படுவதற்காக சமுர்த்தி சமுதாய அமைப்புகளின் மூலம் அதன் அங்கத்தவர்களுக்கு (சமுர்த்தி பயனாளிகளுக்கு) வழங்கப்படுகின்ற ''சமுர்த்தி அருணலு சலுகைக்கடன்'' வேலைத் திட்டத்திற்குரிய ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் இச்சுற்றறிக்கை மூலம் வழங்கப்படுகின்றது.

1.2 2017 மார்ச் மாதம் 07ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட சமுர்த்திக் கட்டளைகள் உள்ளடங்கிய அதிவிசேட வர்த்தமானியின் 4(1)(அ) கட்டளையின் 15ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு நிதியத்திற்கு ''கடன் வட்டி'' மூலமாக வருமானங்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுகின்றமை இச்சமுர்த்தி அருணலு வேலைத்திட்டத்தின் மூலமேயாகும்.

### 02. கடனை வழங்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

2.1 சமுதாய அடிப்படை அமைப்பு ஒன்றின் செயற்பாட்டு ரீதியிலான அங்கத்தவர் ஒருவராக இருத்தல்.

2.2 70 வயதிலும் குறைந்த அங்கத்தவர் ஒருவராக இருத்தல்.

2.3 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் மூலம் வழங்கிய கடனை பெற்றிருத்தல் அல்லது பெறாமலிருத்தல்

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |

2.4 சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கடனுக்குரியதான அறவிடமுடியாக் கடனாளி ஒருவராக இல்லாதிருத்தல்.

2.5 சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் மூலம் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் பராமரிக்கப்பட்டு வருகின்ற சேமிப்பு கணக்கின் மீதியினை அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியால் வழங்கப்படுகின்ற ''சமுர்த்தி அருணலு மீள்நிதியீட்டல் மேலதிகப்பற்றுக் கடன்'' மூலம் பெற்றுக் கொள்ளும் பணத்தினை இக்கடனை வழங்கும் பொருட்டு பயன்படுத்துதல் வேண்டும்.

**03. கடன் எல்லையும் தேவைப்பாடும்.**

3.1 சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு ஒன்றின் அங்கத்தவருக்கு மேலே பந்தி இலக்கம் 02இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கவனத்திற் கொண்டு ரூபா. 10000/- (பத்தாயிரம்) என்ற உயர்ந்த பட்சத்திற்கு உட்பட்டதாக கடன் தொகையினை விடுவிக்க முடியும்.

3.2 அவசர கடன் தேவைகள் (இடர், சுகயீனம், கல்வி, வைபவங்கள் அல்லது நுகர்வு) உட்பட வாழ்வாதாரப் பணிகளுக்குரிய கடன் தேவைப்பாடுகளின் பொருட்டு (பொருட்கள் அல்லது சேவைகளின் உற்பத்தி, பயிர்ச் செய்கை நடவடிக்கைகள், வர்த்தகம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி) சமுர்த்தி அருணலு கடனை விடுவிக்க முடியும்.

3.3 இக்கடனை வழங்கும் பொருட்டு இணைப்பு COB - 11/01 இன் பிரகாரம் தயாரித்துக் கொள்ளப்பட்ட ஆவணத்தை சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினால் பயன்படுத்த முடியும்.

**04. வட்டி வீதமும் கால வரையறையும்**

4.1 கடன் தொகையினை தவணை அடிப்படையில் அல்லது ஒரே தடவையில் மீளச் செலுத்தலாம் என்பதுடன் அதனை நாளாந்தம், வாராந்தம் அல்லது மாதாந்தம் என ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

4.2 கடனை மீளச் செலுத்தும் உச்சபட்ச கால எல்லையானது ஒரு வருடமாகும். (12மாதங்கள்)

4.3 சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினால் தனது அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற சமுர்த்தி அருணலு சலுகைக் கடனை நாளாந்தம் அல்லது வாராந்தம் மீளச் செலுத்தும் போது மாதாந்தம் 1% இற்கான (நூற்றுக்கு ஒன்று) நிலையான வட்டி வீதமும், மாதாந்தம் மீளச் செலுத்தும் போது 12% இற்கு (நூற்றுக்கு பன்னிரண்டு) குறைந்து செல்லும் முறையின் கீழ் வட்டி வீதம் ஒன்று அறவிடப்படல் வேண்டும்.

**05. பிணைகள்.**

5.1 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியிலிருந்து, சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு பெற்றுக் கொள்ளும் மீள்நிதியீட்டல் மேலதிகப்பற்றுக் கடனின் பொருட்டு சேமிப்புக்கணக்கின் மீதி பிணையொன்றாக அமையும்.

5.2 சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினால் தங்களது அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற அருணலு சலுகைக்கடனின் பொருட்டு பிணைகளைப் பெற்றுக் கொள்வது அல்லது பெற்றுக் கொள்ளாமை ஆகிய எந்த ஒரு விதத்திலாவது தனிநபர் பிணை ஒன்று என சமுதாய அடிப்படை அமைப்பின் மேவுகை அங்கீகாரத்திற்கு உட்பட்டதாக நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்க முடியும்.

**06. பொதுவான விடயங்கள்**

6.1 கொரோனா வைரசை இலங்கையிலிருந்து இல்லாதொழிப்பதற்குரியதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிட்ட 10/2020 என்ற இலக்கத்தினை உடைய சுற்றறிக்கைக்கு ஏற்றாற் போல் நடவடிக்கைகளை மேற்கொண்டு இச்சுற்றறிக்கை ஆலோசனைகளை செயற்படுத்துதல் வேண்டும்.

6.2 இச்சமுர்த்தி அருணலு சலுகைக்கடனை வழங்குவது தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்களை சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளால் தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்ற புத்தகங்களில் பொருத்தமான பிரகாரம் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்பதுடன் அதற்குரிய முறைப்படியான திட்டங்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மூலம் அறிவிக்கப்படும்.

6.3 இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் விளையாட்டுப் பிரிவின் பணிப்பாளரை (0112879773/ 0714118226) அல்லது குறுநிதிப்பணிப்பாளரை (0112887469) தொடர்பு கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

ஆர்.பி.பீ. திலக்கசிரி,
பணிப்பாளர் தலைமையதிபதி,

Translated by:- M.M.M.Jawhar (Translator)

பிரதிகள்:-

01. மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூகபாதுகாப்பு அமைச்சர் கௌரவ பவித்திராதேவி வன்னி ஆரச்சி – த.கூ.க.பொருட்டு
02. செயலாளர், மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூகபாதுகாப்பு அமைச்சு. – த.கூ.க.பொருட்டு
03. இராஜாங்க செயலாளர், சமூகபாதுகாப்பு அமைச்சு. – த.கூ.க.பொருட்டு
04. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் – த.கூ.க.பொருட்டு
05. சகல பணிப்பாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் – த.கூ.க.பொருட்டு
உ.ந. பொருட்டு